A/L 91
பிரிவு II
ஆரம்பமாகவுள்ளது

A/L 89
மாணவர்களுக்கு
வகுப்புகள் ஆரம்பமானதும்
பயிற்சிப் பரீட்சைகள்
நடைபெறும்:
PERSONAL CLASSES
B. M. C. FRONT LANE,
JAFFNA.

பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 2/50

PERSONAL CLASSES
B.M.C. FRONT LANE,
JAFFNA.
A/L 89, 90 & 91
வகுப்புகள்
நடைபெறுகின்றன.
PHY: சத்தியசீலன்
CHB: மதுரமணி
BOT. சர்வானந்தன்
ZOO. ஈஸ்வரதாசன்
PURE. APP. } விஜயகுமார்

சுடர்: 4 சுக்கில ஸ்ரீ ஆவணி ௴ 13 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 முஹறம் பிறை 26 (29 : 08 : 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 229

ஜே.வி.பியின் வேலை நிறுத்தம் ஆரம்பம்

# தென் இலங்கை முழுவதிலும் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதம்

## ஆயுதப்படைகள் உஷார் நிலையில்!

கொழும்புஆக 29

ஜே வி. பி. இயக்கத்தினர் விடுத்த அழைப்பை ஏற்று தென்னிலங்கையின் ஏழு மாகாணங்களிலும் ஒரு வாரகால வேலை நிறுத்தம் நேற்று ஆரம்பமாகியது

அதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை நிலை நேற்று முற்றாக ஸ்தம்பித்தது.

சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைக்கும் முக்கிய இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலை நிறுத்தம் நேற்று பூரண வெற்றி கண்டதாக கொழும்பில் அவதானிகள் தெரிவித்தனர்.

தலைநகர் கொழும்பில் கடைகள், அரசு அலுவலகங்கள், வங்கிகள் மூடப்பட்டன: பஸ்கள், ரயில்கள் பெரும்பாலானவை ஓடவில்லை.

மூடப்பட்ட கடைகளின் பூட்டுக்களை பாதுகாப்புப் படையினர் உடைத்துத் திறந்தனர்.

ஆனால் கடை உரிமையாளர்கள் பொருள்களை விற்க மறுத்தனர்; சில இடங்களில் மட்டும் ஆயுதப் படையினருக்கு அஞ்சி, அவர்கள் காவல் புரியச் சில கடைகள் திறந்திருந்தன; ஆனால் மக்கள் நடமாட்டம் மிகமிகக் குறைவாகவே இருந்தது:

தென் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் இதே நிலைமை தான் நேற்றுக் காணப்பட்டதாகக் கொழும்புக்குத் தகவல்கள் கிடைத்தன.

வேலைநிறுத்தத்தை நடத்தும் சட்டன பெரமுன பேச்சாளர் ஒருவர் —

'இந்திய எதிர்ப்பு நடவடிக்கையில் ஜூலை 28 முதல் ஈடுபட்டவர்களை பாதுகாப்புப் படையினர் கொன்று வருகின்றனர். அதை எதிர்த்தே இந்த வேலைநிறுத்தம்'' — என்று சொன்னார்.

சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைத்து அரசாங்கத்தை ராஜினாமாச் செய்ய நிர்ப்பந்திக்கவும் இந்த வேலைநிறுத்தம் நடத்தப்படுவதாகவும் அந்தப் பேச்சாளர் சொன்னார்.

### தாக்குதல் சாத்தியம்

இதே வேளையில் — தென்பகுதியில் பாதுகாப்புப் படை முகாம்கள் மற்றும் பொலீஸ் நிலையங்கள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஆரம்பமாகியுள்ள ஒரு வாரகால வேலைநிறுத்தத்தின் போது தீவிரவாதிகள் திடீர்த்
(6ஆம் பக்கம் பார்க்க)



மயிலேறி வேல்கொண்டு அடியவர் வினைதீர்க்கும் தமிழ்க் கடவுள் முருகன் இன்று நல்லூரிலே தேரேறி பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் திருநாள்.

இன்று நடைபெறும் நல்லூர்த் தேர்த்திருவிழாவை முன்னிட்டு எட்டுப் பக்கச் சிறப்பு மலர் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. வழமையான ஆறு பக்கங்களையும் சேர்த்து மொத்தம் பதினான்கு பக்கங்களில் இன்றைய உதயன் மலர்கிறான்;

சிறப்பு மலரில் பிரசுரமாகியுள்ள வர்ண ஓவியங்களை வரைந்தவர் உதயனின் பிரதம ஓவியரும் ஈழத்தின் பிரபல மூத்த ஓவியருமான ''வி கே'' வி கனகலிங்கம் ஆவார். ஓவியங்களுக்கு வர்ணப் பிரிவு செய்தவரும் அவரே:

ஓவியங்களை நுட்பம் கலந்த புளொக் ஆக்கித் தந்தவர் 'ஜாரனட் கிராபிக்ஸ்'' நிறுவனர் திரு. கே. டபிள்யு தைரியர்:

வர்ணப் படம் அச்சுப் பதிவு: அருண் பிறின்டேர்ஸ்.

முச்சந்தி முரளி



வேல் முருகா மால் மருகா வா! வா! தேரேறி வந்து தமிழர் வினை கடிவாய் நல்லைக் கந்தா!!

வடபகுதிக்கான

## மின்சாரம் இப்போதைக்கு கிடைக்கும் சாத்தியம் இல்லை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 29

''வடபகுதிக்கான நீர் மின்சாரம் இப்போதைக்கு கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறு எதுவும் இல்லை ''

இவ்வாறு கொழும்புசென்று திரும்பிய வடபிரதேச மின்சார சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்:

கடந்த வாரம் கொழும்பு சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்திவிட்டு நேற்றுத் திரும்பிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

''கொழும்பு மின்சாரசபை அதிகாரிகள் இங்கு மின்சாரம் வழங்க அக்கறையுடன் இருக்கிறார்கள். இரு வாரங்களுக்கு முன் மின்சாரசபை பொறியியலாளர் குழுவினர் குறிப்பிட்ட இடத்துக்கு திருத்த வேலைக்குச் சென்றனராம்:

ஆனால் இனந்தெரியாதவர்களால் அக்குழுவினர் திருப்பி
(6ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுக் கடைகளில் கட்டுப்பாட்டு விலையில் மாவை விற்கும் சாத்தியம்

யாழ்ப்பாணம்: ஆகஸ்ட் 29

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கக்கடைகளில் கட்டுப்பாட்டு விலைக்கு மாவை விற்பனை செய்யும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக அறிய வருகிறது:

கடந்த சில நாட்களாக கட்டுப்பாட்டு விலையிலும் கூடிய விலைக்கே மா விற்பனை செய்யப்பட்டு வந்தது:

திருகோணமலை சென்று மா எடுத்து வருவதற்கான லொறிக் கொடுப்பனவுகள் வழங்கும் வேலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து மாவின் விலை 25 சதத்தால் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
(6ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டடியில் முஸ்லிம் இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஆக: 29

யாழ்ப்பாணம் கொட்டடியில் நேற்றுக்காலை இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்:

கொலையுண்டவர் யாழ் முஸ்லிம் பகுதியைச் சேர்ந்த மொகமட் நஸீர் [வயது 27] என்று அடையாளம் காணப்பட்டது: [ஒ-9]

## 366 அடையாள கார்ட்டுகள்

கொழும்பு, ஆக. 29

எட்டியாந்தோட்டையில் சந்தேகநபர் ஒருவரிடமிருந்து 366 அடையாளக் கார்ட்டுகளும் துப்பாக்கிகளும் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டன: (இ)

## சுட்டுக் கொலை

கொழும்பு, ஆக. 29

மெதகெஸ்கிரிய கிராம சபைத் தலைவர் நேற்று இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். (இ)

## கான்ஸ்டபிள் பலி

கொழும்பு; ஆக 29

வெலிகமவில் உள்ள மேல் மாகாணசபை ஆளுநர் ஜெயவிக்கிரமாவின் இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில், கடமையில் இருந்த பொலிஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டார்;

செய்திச் சாரம்

## கொழும்பில் பத்திரிகைகள் வெளிவரவில்லை

கொழும்பு. ஆக, 29

கொழும்பில் சில பத்திரிகைகள் நேற்று வெளிவரவில்லை என்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன: (ஒ-எ)

## முள்ளியவளை சுற்றிவளைப்பு

முல்லைத்தீவு. ஆக. 26

முள்ளியவளைப் பகுதி நேற்று முன்தினம் சுற்றிவளைக்கப்பட்டது. படையினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டனர்:

பிற்பகல் அடுத்தடுத்து ஷெல் சத்தங்கள் கேட்டன. இதனால் அப்பகுதி மக்கள் பீதி அடைந்தனர்; (ஒ-92)

## கைதானார்

பொலிஸ் சேவையிலிருந்து தாமாகவே விலகிக்கொண்ட நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது கைது செய்யப்பட்டார்,

அநுராதபுரம் மாவட்டத்தைச்சேர்ந்த மருதங்கடவல என்ற இடத்தில் நேற்று இச் சம்பவம் நடந்தது: (இ)

## ஹெவி டீசல் கையிருப்புக் குறைவு; எந்நேரமும் மின் தடை வரலாம்!

யாழ்ப்பாணம் ஆக. 29

சுன்னாகத்திலுள்ள ஜெனரேட்டர்கள் திருத்தப்பட்ட போதும் ஹெவி டீசல் போதுமான அளவு கையிருப்பில் இல்லாததால் சுழற்சி முறையிலான மின்சார விநியோகம் எந்நேரமும் மீண்டும் தடைப்படலாம்;

மின்சாரசபை உயர் அதிகாரி ஒருவர் நேற்று இதனைத் தெரிவித்தார்.

அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:

'சுன்னாகத்தில் பழுதடைந்த ஜெனரேட்டர்கள் திருத்தப்பட்டுள்ளன. கொழும்பில் இருந்து ஹெவி டீசலும் வந்ததையடுத்து நேற்று குடாநாட்டில் சுழற்சி முறையிலான மின்சாரம் வழங்கப்பட்டது:

தற்சமயம் ஹெவிடீசல் கூடுதல் அளவு இங்கு கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேரடியாக சுன்னாகம் வரை ரயில் சேவை நடைபெறக் கூடிய நிலை உருவாகியுள்ளதால்; கூடுதல் டீசலை சுன்னாகத்துக்கு நேரடியாக கொண்டு செல்ல முடியும். பவுசர் பிரச்சனையும் இல்லை:

ஹெவிடீசல் வரும் வரை இயன்றளவு சுழற்சி முறையில் மின்சாரத்தை மட்டுப்படுத்தப்பட்ட வகையில் வழங்க மின்சார சபை முயற்சி செய்து வருகிறது.

இப்படி அந்த அதிகாரி தெரிவித்தார்.

(இ-8)

## வேலைக்குச் செல்லாத ஊழியருக்குச் சம்பளமில்லை

### அரசாங்கம் நேற்று அறிவிப்பு

கொழும்பு. ஆகஸ்ட் 29

கடமைகளுக்குச் சமுகமளிக்காத அரசு ஊழியருக்கு சம்பளம் வழங்குவதை உடனடியாக நிறுத்துவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இத் தகவல் வெளியிடப்பட்டது.

பயமுறுத்தலைக் காரணம் காட்டி திடீரென்று சமுகமளிக்க அரசு ஊழியர் தவறுவதால் பொதுமக்கள் கஷ்டமடைய வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

நாசகார சக்திகள் மரணபீதியை உண்டுபண்ணி சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலைக்க முயல்கின்றன. இதனை அரசு அனுமதிக்காது என்றும் அந்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டது.

(அ-எ)

## நல்லூர்க் கந்தன் வெளிவீதியில் ரத பவனி

யாழ்ப்பாணம், ஆக. 29

நல்லூர்க் கந்தன் இன்று காலை சிற்பமயமான அலங்காரத் தேரில் பவனி வந்து அடியார்களுக்கு அருள் தரிசனம் நல்குவார்;

கடந்த ஆறும் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருடாந்த உற்சவத்துக்கு மகுடம் வைத்தாற் போல இன்று அழகன் முருகன் தேரேறி உலா வருகிறார்.

அதிகாலை ஆறு மணிமுதல் அபிஷேகம் கும்ப பூசை, வசந்த மண்டபபூசைகள் என்பன இடம்பெற்று பிரபல நாகசுர விற்பன்னர்களின் மல்லாரி முழக்கத்துடன் அடியார்களின் பக்திப் பண்ணுக்கு மத்தியில் நல்லையம்பதி உறையும் வேலவப் பெருமான் காலை ஏழு மணிக்கு தேரில் ஆரோகணிப்பார். காலை 8 30மணிக்கு தேர் இருப்பிடத்தை அடைந்து பஞ்சமுக அர்ச்சனை இடம்பெறும்;

தேர் வெளிவீதியில் பவனி வருவதற்கான ஏற்பாடுகள் யாவும் நேற்று மாலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

கடந்த 23 நாட்களாக முருகப்பெருமான் வெளிவீதி வலம் வரவில்லை என்பது அடியார்
(6ஆம் பக்கம் பார்க்க)

## சுங்க, குடிவரவு நிர்வாகம் படை அதிகாரிகளிடம்!

கொழும்பு, ஆக. 29

குடிவரவு, குடியகல்வு மற்றும் சுங்கத் திணைக்கள நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொறுப்பும் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஏழு மாவட்டங்களுக்கு நேற்று உதவிக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்:

அந்தந்த மாவட்டங்களின் பொலீஸ் மற்றும் படை அதிகாரிகளை உதவிக்கட்டுப்பாட்டு அதிகாரிகளாக ஜனாதிபதி திரு. ஆர்: பிரேமதாச நேற்று நியமித்தார்;

இரண்டு பகுதிகளுக்கும் கட்டுப்பாட்டு அதிகாரிகள் அந்தந்த திணைக்களத்தின் தலைமையகங்களில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விவரம் வருமாறு:

யாழ்ப்பாண மாவட்டம்

ரி. கே. ஜெயராஜன், (பொலீஸ் அதிபர்) கமாண்டர் ராஜரத்தின (கடற்படை) ஸ்குவாட்ரன்லீடர் ரணசிங்க (விமானப்படை) மேஜர் விதாரணகே (ராணுவம்)

திருகோணமலை மாவட்டம்

எம். பி: ஜெயசுந்தரா (பொலீஸ் அதிபர்) கமாண்
(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

(29 - 8 - 1989)

ஆவணி 13 செவ்வாய்க்கிழமை

நக்ஷத்திரம்: பூசம்

சுபநேரம்:

3-05 முதல் 4-35 வரை ஞானம்:

10-35 முதல் 12-05 வரை நல்லூர் கந்தசாமி தேர்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

திருநெல்வேலி பலாலி வீதியில் (சந்திக்கு அருகாமை) அல்லது கே: கே: எஸ் வீதி பகுதியிலும் சகல வசதிகளும் கூடிய வீடு ஒன்று உடனடியாகத் தேவை. தொடர்பு! கிருஷ்ணு பாம் 41, பலாலி வீதி திருநெல்வேலி, வடக்கு. (1834)

### மணமக்கள் தேவை

கனடாவால் வந்த யாழ் இந்து வேளாள 32 வயது I. C. M A. க்கு Accountancy படித்துக் கொண்டிருக்கும் பெண் தேவை. இந்து வேளாள 32 வயதுப் பெண்ணுக்கு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் வெளிநாட்டிலோ, உள்நாட்டிலோ தேவை: விபரங்களுக்கு மதிகள ஏஜென்சி கொய்யாத் தோட்டம்: யாழ்ப்பாணம். (1757)

### விற்பனைக்கு

பழைய புத்தகங்கள் விற்கவும் வாங்கவும் S. Senathi rajah Second Hand Book House 13/6, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்: முரசொலி இலங்கை வங்கி முன் பட்டப் படிப்பு கல்லூரி ஒழுங்கை. (1755)

24.5 H P. டீசல் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. நா; சிவபாலமூர்த்தி, கே: கே: எஸ்: ரோட், குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். (1841)

Honda Reconditioned C-90, C-70, C-50, Chaly, C,D-90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. Anton Enterprises, No: 390, மெயின் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (1833)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer Books) கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (1551)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broilers எல்லா வகையான கோழி இறைச்சியும்எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தி. (11778)

### A/L இரசாயனம்

108, பிறவுன் Road, இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் A/L 90, 01-09-89 வெள்ளி 6 30 a.m A/L 91, பிரிவு I 31-08 89 வியாழன் 6.30 a.m A/L 91, பிரிவு II 02-09-89 சனி 11.30 a.m A/L 89 மீள் விடை 01-09-89 வெள்ளி 4.30 சனி, ஞாயிறு 3-5 p.m (1758)

### இரசாயன நூல்

ஆசிரியர் சத்தீஸின் இரசாயன நூல்கள் வெளிவந்து விட்டன: அடிப்படை இரசாயனம் பகுதி I, பகுதி II சேதன இரசாயனம் பகுதி I பகுதி II, சேதன இரசாயனம் பகுதி II பூபாலசிங்கம், ஸ்ரீ சுப்பிரமணியம், ஸ்ரீலங்கா புத்தகசாலை யாழ்ப்பாணம், சிவா மெடிக்கல்ஸ் சாவகச்சேரியிலும் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம். (1759)

### Personal Class

சங்கானை மல்லாகம் சந்தி பொருளியல் திரு. உதயன், கணக்கியல் திரு. ரஞ்சன் 90-91, A/L ஆரம்பம் 1-9-1989. (1754)

### Spoken English

Spoken English புதிய பிரிவு ஆரம்பம் 2. 9. 89 சனி, ஞாயிறு மட்டும்: நேர 3-4½ p. m: தொடர்பு: S B. Iyar, 12 வைமன் வீதி, நல்லூர்: (1821)

### தவறிவிட்டது

க; மாலினி அடையாள அட்டை இலக்கம் 675041849 V நாரந்தனை கிழக்கு ஊர்காவற்றுறை என்ற விலாசமுடைய அடையாள அட்டை K: K. S. மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்: (1756)

### பிரெஞ்சு மொழி வகுப்புகள்

ஆரம்ப பிரெஞ்சு மொழி (Beginners Course) 2- 9- 89 சனிக்கிழமை காலை 9 மணி முதல் ஆரம்பமாகின்றது: தொடர்பு: Alliance Francaise De Jaffna யாழ்: பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம், 130, முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். (1713)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள், Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்: (சி/3264)

### சோதிட. மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரக தோஷம் முதலா மாந்திரீக விடயங்களுக்கு நாடுங்கள்! 'சக்தி சரவணு' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும் மட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ். இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (வியாழக்கிழமை விடுமுறை) (1701)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Dekalb) பிறவுன் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் (30. 8. 89) புதன்கிழமை குறைந்தவிலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே, பதிவு செய்க. இல. 9, சந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) குறிப்பு. (எங்கள் குஞ்சுகளுக்கு லேட் தேவை இல்லை) (1740)

### கோழிக்குஞ்சுகள் விநியோகம்

Golden Comet பிறவுன் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 30 ஆம் திகதி புதன்கிழமையும், Hybro புரொயிலர் குஞ்சுகள் 31 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும்: முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1725)

தாய இன Golden Comet பிறவுன் Hyline கறுப்பு Christhombo புரொயிலர் குஞ்சுகள் பெற பதிவு செய்க. யாழ்ப்பாணம் கால் நடை வளர்ப்போர்சங்கம். சுன்னாகம் கிளை (பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் அலுவலகம்). கே: கே. எஸ் வீதி, சுன்னாகம். (1813)

## நாளை நல்லூரில் கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம் ஆக: 29

நல்லை ஆதீனத்தில் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு அஷ்டலக்ஷ்மி கலண்டர் நிறுவனத்தின் ஆதரவில் தமிழ் மணி கப. கணேசசுந்தரத்தின்'' தந்தைக்குபதேசித்த தனயன்'' கதாப்பிரசங்கம் பக்கவாத்தியசகிதம் நடைபெறும்.

அத்துடன் மேற்படி நிறுவனத்தின் 1989 கலண்டர்ப் போட்டியின் பரிசுகள் நல்லை ஆதீன முதல்வரால் வழங்கப்படும். (க)

## "நல்லூர்க் கந்தன் திருப்புகழ்" நூல் வெளியீடு இன்று காலை

யாழ்ப்பாணம் ஆக: 29

எழுத்தாளர் சொக்கன் எழுதிய நல்லூர்க்கந்தன் திருப்புகழ் நூல் வெளியீட்டு விழா நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் இன்றுசெவ்வாய்க்கிழமைகாலை 10 மணிக்கு நடைபெறுகிறது.

ஆதீன முதல்வரின் அருளாசியுடன் ஆரம்பமாகும் இந்த விழாவில், சங்கீத பூஷணம். ச. பாலசிங்கம், சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை, அருட்பாஅரசு இ: ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, முத்தமிழ்மணி, சு: கணேசசுந்தரன் ஆகியோர் ''நல்லூர்க் கந்தன் திருப்புகழ்'' நூலில் உள்ள பாடல்களை இசைக்க வித்துவான் சி குமாரசாமி திரு. க. சின்னையா, வித்துவான் எஸ். சின்னத்தம்பி, வித்துவான் இ. ச. செல்லத்துரை ஆகியோர்ப் பொருள் விளக்குவார்கள்.

நயினை நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான, நல்லூர்க் கந்தசாமி கோயில் மகோற்சவ, பிரதம குரு பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

''நல்லூர்க் கந்தன் திருப்புகழ்'' நூல் உதயன்-சஞ்சீவி பத்திரிகை நிறுவனத்தின் அன்பளிப்பாக இன்று நல்லூர் தேர்த்திருவிழாவில் விநியோகிக்கப்படும். (த)

கண்டெடுக்கப்பட்ட

## அடையாளக் கார்ட்டுகளும் கடவுச்சீட்டுக்களும்

யாழ்ப்பாணம் ஆக: 29

பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டு 292/2 நாவலர் வீதியில் உள்ள உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்ட அடையாளக் கார்ட்டுகளில் 115 அடையாளக் கார்ட்டுக்களின் விவரங்கள் வெளிவந்து விட்டன:

இன்று இறுதிப் பகுதியாக பாடசாலை மாணவரின் அடையாளக் கார்ட்டுக்கள், தற்காலிக அடையாளக் கார்ட்டுகள் அஞ்சல் திணைக்கள அடையாளக்கார்ட் யாழ் பல்கலைக்கழக அடையாளக் கார்ட், கடவுச்சீட்டு ஆகியனபற்றிய விவரங்கள் வெளி வந்துள்ளன.

**பாடசாலை மாணவர்கள் அடையாளக் கார்ட்டுகள்**

1. செல்வி தருமபுத்திரன் தயாளினி, இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
2. செல்வன் கி. ஜெயசங்கர் அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.
3. செல்வி வேலாயுதம் துரேஸ்வரி, உடுவில் மகளிர் கல்லூரி.
4. செல்வி நாராணபிள்ளை ஜெயந்திமலர், நல்லூர் வடக்கு.
5. செல்வன் யோசேவ் யோகராஜா யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை.
6. அடையாள அட்டை இலக்கம். 0195 கணவதிப்பிள்ளை ஜொந்திரராசா சரிபாலைநாயகபடுவம்.

**தற்காலிக அடையாளக் கார்ட்டுகள்**

1. எம் மகேந்திரராசா அஞ்சல் திணைக்கள அடையாள அட்டை.
2. திருமதி புஷ்பராணி செல்வராஜ், நாவாந்துறை
3. எ. சிவலிங்கம், திருநெல்வேலி கிழக்கு:
4. சதாசிவம் விஜியரத்தினம், சின்னக்கடை, யாழ்ப்பாணம்:
5. செல்வி எஸ். கமலநாயகி கோண்டாவில் கிழக்கு. கோண்டாவில்.
6. பொன்கலர் அன்ரன் றெஜி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
7. குமாரசாமி திரவியராசா மோட்டார் றைவிங் லைசன்ஸ் 018879:
8. மார்க்கண்டு, அச்சுவேலி
9. மு. ராஜரட்ணம் உரும்பிராய் வடக்கு, உரும்பராய்.
10. ச. ரங்கநாயகி, 63, யாழ்வீதி, யாழ்ப்பாணம்.
11. சுப்பிரமணியம் குலசேகரம், 677/19, பீச் வீதி, குருநகர்:

**அஞ்சல் திணைக்கள அடையாள அட்டை**

1. செல்வராஜ் குமுதினி, திருநெல்வேலி.
2. எ. அன்ரன், நாவாந்துறை.
3. க. ஜோதிகாவலன், குமரபுரம்.
4. பி ஆர் குணசீலன் கோப்பாய்.

**யாழ்ப்பாண பல்கலைக்கழக அடையாள அட்டை**

1. செல்வி தேவகி ராசரெட்ணம், சட்டப்பியார் வளவு. கொத்தாவத்தை, வல்வெட்டித்துறை.

**கடவுச் சீட்டு**

1. தில்லைநாதன் சிவநேசன் இலக்கம் J 0100879.
2. மாசிலாமணி சிலன், இலக்கம் H 0051184.

(முற்றும்)

## கோரிக்கை

வவுனியா, ஆக. 29

தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக வடகிழக்குப் பகுதிகளில் சிற்றலை மற்றும் மத்திய அலைவரிசைகளில் தமிழ் ஒலிபரப்பினைத் தெளிவாகக் கேட்க முடியாதுள்ள நிலைமை குறித்து உடன்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வவுனியா மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ப. பராபரன் கோரியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-164)

## சிரமதானம்

மானிப்பாய், ஆக. 29

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் புதிய அதிபர் பதவியை பொறுப்பேற்றுள்ள திரு: சே. இராசவல்லவனின் வேண்டுகோளை ஏற்று கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி கல்லூரி ஆசிரியர்களும், பழைய மாணவர்களும் ஒன்று சேர்ந்து கல்லூரி வளவை துப்பரவு செய்தார்கள். (க-90)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 7 - 11 - 1937

உதிர்வு: 10 - 9 - 1988

திதி: 30 - 8 - 89

### திருமதி. நல்லநாயகி

அன்பாலும் பாசத்தாலும் எம்மை அரவணைத்துக் காத்த அன்பு அம்மாவே எம்மை அருத்துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்றுஓராண்டு சென்றாலும் உங்கள் இனிய நினைவுகள் எம் இதயங்களில் என்றென்றும் அழியாமல் நிலைத்து நிற்கட்டும். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்!

தாய், பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளை,
உற்றார், உறவினர்கள்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை. (1829)

## நன்றி நவிலல்



### திரு. சண்முகம் தியாகராசா

இளைப்பாறிய தபாலதிபரும், இந்து சாதனம் Hindu Organ ஆகியவற்றின் இடைக்கால (1950-60) உப பத்திராபதிபரும் சைவ அறிஞருமாகிய சரசாலை சண்முகம் தியாகராசா அவர்கள் 30 - 07 - 89இல் அமரத்துவம் எய்தினார்கள்.

அவர் மறைவுத்தினத்தின் அன்புத் துணைவரும் இளைப்பாறிய ஆசிரியர், சரசாலை கைலாயபிள்ளையின் சகோதரரும், இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை திருமதி இலகவதி சிவகுருநாதன் (மட்டுவில் சமரசவித்தியாசாலை), விலைமதிப்புப் பரிசோதகர் ச தி சண்முகநாதன், விலைமதிப்புத் திணைக்களம் ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகதாசவின் பெரிய தகப்பனும், மகேலாகம் கலியுகவரதியின் மாமனும், செந்தில்செல்வி சரசாலை, தயானந்தன், தயாளினி மகேலாகம், செந்தூரன், ஆரூரன் சரசாலை ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகளிலும் மற்றும் சமயாசாரக் கிரியைகளிலும் பங்குபற்றி அவற்றைச் சிறப்பாக நிறைவேற்றிய அனைவருக்கும் '' சிந்தனைக்கு விருந்து '' என்னும் நூல் வெளிவர உதவிய ஏனையோருக்கும் எமது மனமார்ந்த நன்றிப்பதிலை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தனிப்பட்ட அறிவித்தல்கள் கொடுக்க முடியாமையை இட்டு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

பிள்ளைகள்;
திருமதி தி. சிவகுருநாதன்.
திரு. ச. தி. சண்முகநாதன்.

(1676)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. ஆறுமுகம் கேதாரநாதன்

(Superintendent of Customs Preventive Officer, Marine Division Colombo)

தோற்றம்: 09 - 09 - 1940
மறைவு: 09 - 09 - 1988


திதி: அபர பக்க சதுர்த்தசி 29 08 - 1989

வாழ்வது மாயம் எனும் தேவாரத்தின் பொருளை நினைவூட்ட அருமைத் தாய், சகோதரி, மனைவி, மக்கள், உறவினர் அனைவரையும் கலியுக வரதனும் நல்லூர் பெருமானின் தேர்த்திருநாளில் விட்டுப் பிரிந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய இவந்தைவளப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, மக்கள்:

வேலணை — 5 [1692]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



### திரு. கனகசபை பற்குணராஜா

(கணக்காளர், தபாற்திணைக்களம்)

மலர்வு: 23 12 1948
மறைவு: 31, 07. 1989

திரு: கனகசபை பற்குணராஜா (கணக்காளர், தபால் திணைக்களம், மட்டக்களப்பு) அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 17/5, சாஸ்திரியார் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் எதிர்வரும் 30-08-1989 (புதன்கிழமை) நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தவறாது சமுகம் கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,
பாரியாரும், பிள்ளைகளும்.

17/5, சாஸ்திரியார் வீதி,
அரியாலை - யாழ்ப்பாணம்.

(1828)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

குறள்:
நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

பொருள்:
ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று சொல்லப்படுவது தான் பிறந்த குடியை ஆளும் சிறப்பைத் தனக்கு உண்டாக்கிக் கொள்வதாகும்.


# உதயன்

இல. 693/8, [illegible] 24601
யாழ்ப்பாணம். 23071
29 08 1989 [illegible]


## காமினியின் கணக்கு

இலங்கையிலும் சைப்பிரஸ், லெபனான் நிலைமை வரப்போகிறது: அதற்கான அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன—இவ்வாறு அமைச்சர் காமினி திசநாயக்க நாடாளுமன்றத்தில் பேசுகையில் அபாய அறிவிப்புச் செய்திருக்கிறார்.

நூறு பேச்சுகளுக்கு எடுபட்டுப்போன மக்கள், இன்று ஒரு குண்டுக்குப் பயந்து போய் இருக்கிறார்கள். இப்போது உயிருக்குப் போராடும் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது—

அதிகாரம், பாரம்பரியம் ஆகியவற்றில் இருந்து நாம் விலகிச் செல்ல வேண்டி உள்ளது: பிரச்சினையின் இரு பக்கங்களையும் நாம் பார்க்க வேண்டும்— என்றும் அமைச்சர் எடுத்துரைத்திருக்கிறார்.

படிக்க நியாயமான பேச்சாகப் படுகிறது. சற்று யதார்த்த பூர்வமாகப் பேசியிருக்கிறார் என்றும் சொல்லலாம்.

மக்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. அந்த முக்கிய பொறுப்பை அரசினால் செய்ய முடியவில்லை என்றால் அதனால் ஜனநாயகத்தைக் காப்பாற்ற இயலவில்லை என்றே கொள்ளவேண்டும். அர்த்தமும் அதுவே.

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களின் உரிமைகளை தாராள மனதுடன் வழங்கி, அவர்களுடன் (சிங்கள அரசுகளால்) சகோதரத்துவ உணர்வுடன், சமாதானமாக வாழ முடியவில்லை. தமிழர்களைப் பாதுகாக்க முடியவில்லை.

அதே நிலைமை இப்போது சிங்களப் பிரதேசங்களிலும் நிலவுகிறது. வடக்கிலும் கிழக்கிலும் நடந்த அத்தனையும் இப்போது தெற்கிலும் மேற்கிலும் அச்சொட்டாக. அசர வரிசைக் கிரமப்படி நடந்து வருகின்றன. தென்னிலங்கைப் பகுதி மக்களையும் காப்பாற்ற முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

கூட்டு மொத்தத்தில் பெரும்பான்மையினரான சிங்களவர்களையும், சிறுபான்மையினரான தமிழர்களையும் காப்பாற்ற முடியாத நிலையில் அரசு உள்ளது. அதாவது நாடளாவிய ரீதியில் அரசால் ஜனநாயகத்தைக் காப்பாற்ற முடியவில்லை.

இந்த மிக ஆபத்தான சூழ்நிலையில் இலங்கை நிலைமைக்கும், சைப்பிரஸுக்கும் சமாந்தரம் வரைய வேண்டிய நிலைப்பாடு எழவே செய்கிறது.

சைப்பிரஸ் இலங்கையைப் போலவே ஒரு தீவு. இங்குள்ளது போலவே நாட்டின் ஒரு பகுதியில் கிரேக்கர்களும்: மற்றொரு பகுதியில் துருக்கியர்களும் வாழ்கிறார்கள். கிரேக்கர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையானவர்கள்; கிரேக்க நாட்டிலிருந்து சென்று குடியேறியவர்களின் சந்ததியினர். துருக்கியர் சனத்தொகையில் சிறுபான்மையினர்; துருக்கியில் இருந்து சென்று குடியேறியவர்களின் சந்ததியினர்.

தாம் பெரும்பான்மையினர் என்ற இறுமாப்புடன், தாமே வலியவர்கள் என நினைத்து துருக்கியர்களின் உரிமைகளை வழங்காது, அவர்களுடன் சமாதானமாக வாழ எண்ணாது அடக்கி ஒடுக்கும் நினைப்போடு துன்புறுத்தினார்கள். இது கண்டு துருக்கி தனது படைகளை அனுப்பி உதவி சைப்பிரஸ் வாழ் துருக்கியர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியது. இன்னமும் துருக்கிப் படைகள் அங்கே நிலைகொண்டுள்ளன.

இதனைப் பார்த்துக் கொண்டிருக்கப் பொறுக்காத கிரேக்கம் கிரேக்கர் வாழும் பகுதிக்கு பாதுகாப்பு வழங்கியது. சைப்பிரஸாக இருந்த நாடு இப்போது நடைமுறையில் துருக்கியினதும், கிரேக்கத்தினதும் ஆதிக்கத்தில் உள்ள இரு வெவ்வேறு தேசங்களாக நின்று மோதுகின்றன.

இலங்கையிலும் இதே ஆபத்து ஏற்படும் என்பது தான் அமைச்சர் காமினி போடும் கணக்கு. வடக்கு - கிழக்கில் இந்தியப் படைகள் என்றால், தெற்கு-மேற்கிலும் வேற்று நாட்டுப் படை ஒன்று வந்து விடலாம் என்பது தான் அவரது சமாந்தர ரீதியான அச்ச உணர்வு.

லெபனானிலும் அனேகமாக சைப்பிரஸ் போன்ற நிலை தான். அங்கு கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே சச்சரவு. கிறிஸ்தவர்களுக்கு இஸ்ரவேலும், முஸ்லிம்களுக்கு சிரியாவும் ஆதரவு. முஸ்லிம்களைப் பாதுகாப்பதாகக் கூறிச் சிரியப் படைகள் லெபனானுக்குள் சென்றன. அதன் விளைவாக முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்கள் லெபனான் அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. ஆயினும் அங்கும் முஸ்லிம்களுக்கு இடையேயும் அதிகாரப் போட்டி. சியா முஸ்லிம் பிரிவினரும், சுனி முஸ்லிம் பிரிவினரும் தமக்குள்ளே மோதிக் கொள்கின்றனர். (இதன் மத்தியில் சிரியப் படையினர் லெபனானில் இருந்து வெளியேற மறுத்து வருகின்றனர்.)

இலங்கையுடன் சைப்பிரஸ், லெபனான் ஆகிய இரண்டு சமாந்தரங்களையும் அமைச்சர் காமினி மட்டுமன்றி, அரசியல் அவதானிகள் நீண்ட காலமாகவே பொருத்திப் பார்த்து வருகின்றனர்.

இலங்கை அரசும், சிங்கள மக்களும் நிலைமையை உணர்ந்து சரியான வழி செல்லத் தவறினால், தமிழர்கள் தமக்கிடையே உள்ள குரோதங்களைத் தவிர்த்து ஒற்றுமைப்பட மறந்தால்—

இலங்கை = சைப்பிரஸ் + லெபனான் என்ற நிலையே ஏற்படும்.

### கடன் உதவி

நெடுந்தீவு ஆக 29

யாழ்ப்பாணம் மறைமாவட்ட மனித முன்னேற்றக் கழகத்தின் உதவியுடன் நெடுந்தீவில் வாழும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு நெடுந்தீவு பங்குப் பொது நிலையினர் கழகம் ரூபா 1000/ வரைசுழற்சிக் கடன் உதவியாகவழங்க தீர்மானித்துள்ளது.

இதற்கான விவரங்கள் பொது நிலையினர் சழகத்தின் செயலாளர் புலவர் அ. வெ. அரியநாயகம் அவர்களால் திரட்டப்பட்டு வருகின்றது. கடன் உதவித் தொகை அடுத்தவாரத்தில்தெரிவான குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

(க 111)

# நெடுங்கேணி வைத்தியசாலை
# தொடர்ந்து இயங்காத நிலையில்

## காணமற்போனடாக்டருக்குப் பதிலாக இதுவரை எவரும் நியமனம் இல்லை

வவுனியா, ஆகஸ்ட் 29

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ள போதிலும், இரண்டு மாதங்களுக்கு மேலாக நெடுங்கேணி வைத்தியசாலை இயங்காமல் உள்ளது. இதனால் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு பணியாற்றிய வைத்தியர் திடீரென்று காணாமல் போனது தெரிந்ததே.

இவர் எங்கிருக்கின்றார்? இவருக்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரையிலும் தகவல் ஏதும் இல்லை எனறே தெரிவிக்கப்படுகின்றது.

இவருக்குப் பதிலாக வேறு வைத்தியர் எவரும் நெடுங்கேணிக்கு நியமிக்கப்படாததன் காரணமாக இப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கின்றார்கள்.

இதனிடையில் நெடுங்கேணி மகாவித்தியாலயம் இயங்கி வருகின்ற போதிலும் உள்ளூர் வாசிகளான ஆசிரியர்கள் மட்டுமே பணியாற்றி வருகின்றனர்.

வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களான இங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் இன்னும் கடமைக்குச் சமுகமளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. [க-164]

### சூட்டுச் சத்தங்கள்

ஊர்காவற்றுறை, ஆக: 29

பளியங்கூடல், சுருவில் ஆகிய இடங்களில் கடந்த சில நாட்களாக இரவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்பதாக தெரிவிக்கப்படுகின்றது. [இ- 16]

## இந்திய உதவிப் பொருள் கொண்டுவரும் 4ஆவதுகப்பல்

### பிறிமா இறங்குதுறை வருகிறது

திருகோணமலை, ஆக 29

இந்திய உதவிப் பொருட்கள் அடங்கிய நான்காவது உணவுக் கப்பல்கள் இம்மாத இறுதிக்குள் திருகோணமலை பிறிமா இறங்கு துறையை வந்தடையவிருப்பதாக வடக்கு கிழக்கு மாகாண காணி, விவசாய அமைச்சர் திரு. சி. எம். கணேசலிங்கம் தெரிவித்தார்.

இக்கப்பலில் ஒருகோடி இந்தியரூபா பெறுமதியான அச்சக இயந்திரத் தொகுதி, 10 மகேந்திரா ஜீப்புகள், 200 சைக்கிள்கள், நான்கு தண்ணீர் பவுசர்கள், 10 வானொலிப் பெட்டிகள். 10 தொலைக்காட்சிப் பெட்டிகள், வாகன திருத்தவேலைத் தளத்திற்கான உபகரணங்கள். மதிய உணவுத் திட்டத்தைநடைமுறைப் படுத்துவதற்காக வடக்குகிழக்கில் உள்ள 1736 பாடசாலைகளுக்கான 5500 சமையல் பாத்திரங்கள், கட்டட வேலைகளுக்கான இயந்திரத் தொகுதிகள் என்பன கொண்டுவரப்படும்.

இதன்மூலம் குறைந்த செலவிலான 3000 வீடுகளும், 500 அரச விடுதிகளும் அமைக்கப்படும்.

மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான 30 கண்ணாடி இழைப்படகுகளும் மீன்பிடி வலைகளும், குழாய்க் கிணறு தோண்டும் 5 இயந்திரங்களும், 36 உழவு இயந்திரங்களும், சுகாதார சேவைக்கான உபகரணங்களும், கைத்தொழில் பேட்டைக்கான இயந்திரங்களும் மற்றும் பயிற்சிநெறிக்கான உபகரணங்களும் இக்கப்பல்மூலம் கொண்டு வரப்படவுள்ளன.

### தலைமை நீதியரசராக நியமனம்

கொழும்பு, ஆக 29

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசராக திரு. எஸ். பி. குணவர்த்தன நியமிக்கப்பட்டார்.

தலைமை நீதியரசராக பணிபுரிந்து வந்த நீதியரசர் திரு. பி. இராமநாதன் உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டது தெரிந்ததே. (ஒ-எ)

## வடக்கு - கிழக்குக்கு திரைப்படக் கூட்டுத்தாபனம் தனியாக வேண்டும்

யாழ்ப்பாணம், ஆக. 29

வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் திரைப்படக் கூட்டுத்தாபனம் ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய சினிமா ஊழியர் சங்கத்தின் செயலாளர் வட-கிழக்கு மாகாண அரசுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கில் சினிமாத் தொழிலின் இன்றைய நிலைமையையும் சினிமா ஊழியர்களின் கஷ்டங்களையும் அவர் இந்த மகஜரில் விளக்கிக்கூறியுள்ளார்.

அவர் மேலும் இந்த இரண்டு மாகாணங்களிலும் விநியோகம் செய்வதற்கான திரைப்படங்களை நேரடியாக இறக்குமதி செய்யும்படி பழைய தரமான படங்களை ஒப்பந்தங்களைப் புதுப்பித்து புதிய பிரதிகளைப் பெறும்படியும் ஆலோசனை தெரிவித்துள்ளார். (க-6)

### இராசகோபுரம்

யாழ்ப்பாணம், ஆக. 29

பிரசித்திபெற்ற சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் பல இலட்சம் ரூபா செலவில் ஐந்து தளங்களைக் கொண்ட இராசகோபுரம் அமைக்கப்படவுள்ளது.

அனுபவம் பெற்ற சிற்பிகளால 65 அடி உயரத்தில் இக்கோபுரம் நிர்மாணிக்கப்பட இருக்கிறது.

இக் கோபுரம் கட்டுவதற்கான அடிக்கல் நடும் விழா அடுத்த மாதம் ஏழாம் திகதி நடைபெறவிருக்கிறது. (3)

### தொண்டர் பயிற்சி வகுப்பு

சாவகச்சேரி, ஆக: 29

இலங்கை குடும்பத் திட்ட சங்கத்தின் மகிழங்கேணி கிராமத்திற்கான தொண்டர்களுக்குரிய மூன்று நாள் பயிற்சி வகுப்புகள் அறவழிப் பணியகத்தில் நடைபெற்றன.

குடும்பத் திட்ட சங்கத்தின் யாழ் மாவட்ட திட்டமுகாமையாளர் திரு. என். ரி. அன்பானந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விரிவுரைகளை நிகழ்த்தினர். (க-31)

### வாசகர் திருமுகம்

#### கொடிகாமம் ரயில் நிலையம்

கொடிகாமம் ரயில் நிலையத்தின் தென்பக்கமாக புகையிரத குட்செட் வீதியை அண்டியுள்ள பாரிய தாழ்ந்த பிரதேசம் (சுமார் 500 யார்) சீராக்கப் பெற்று மக்களின் கால்நடைப் பாதையாக்கப் படவேண்டும்.

இப்பிரதேசம் ரயில் நிலையம் ஆரம்பகாலம் முதலாக இருந்து வருவது குறிப்பிடத் தக்கது. அக்காலத்தில் புகையிரத நிலையத்தை அமைக்க மண்வாரிப் போட்டதால் இத் தாழ்ந்த பிரதேசம் உருவாகியது. இப்பகுதி மக்களின் போக்குவரவுக்குரியதாக அக்காலத்தில் இருந்தது.

இப்போது வருடந்தோறும் மாரிகாலத்தில் நீர் நிறைந்து பாப வசதியின்றி ஒரு வாவி போல அமைகிறது அப்பிரதேசம் முழுவதிலும் செடி. கொடிகள் பயனற்றமரங்கள் வளர்ச்சியடைந்து சிறிய காடாகக் காட்சியளிக்கின்றது கஞ்சல் குப்பைகளும் இப்பகுதியில் தள்ளிவிடப்படுகின்றன.

இப்பகுதியில் சில குடும்பங்களும் வசிக்கின்றனர். நீர் நிறைந்து தேங்கி நிற்பதால் அசுத்தமடைவதுடன் நுளம்பு முதலான தொற்று நோய்க் கிருமிகளின் உற்பத்திக்கும் வாய்ப்பாகின்றது.

மேலும் விஷ ஜெந்துக்களின் உற்பத்திக்கும் குறைவில்லை. விஷ ஜெந்துக்கள் சில சமயம் புகையிரத நிலையத்தவரின் வசிப்பிடம் பணிமனையையும் எட்டிப் பிடிக்கின்றன.

இப்பகுதியைத் திருத்தியமைத்து மக்களின் நடைபாதையாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயற்சி செய்ய வேண்டும்.

சி. செல்லத்துரை
கொடிகாமம்.

#### கோண்டாவில் உப தபாலகம்

கோண்டாவில் கிழக்கு உப தபாலகத்தில் வெளிநாட்டு உள்நாட்டுக் கடிதங்களை நாம் அனுப்பக் கொண்டு செல்லும் போது தங்களிடம் கடிதம் நிறுக்கும் தராசு இல்லை என்றும் கடிதங்களை வெளியில் உள்ள கடைகளில் நிறுத்துக் கொண்டுவரும்படியும் கூறுகிறார்கள்: நாம் கடைகளுக்கு நிறுக்கச் செல்லும் போது கடைகளில் கிராம் படிகளின் தட்டுப்பாடு காரணமாகப் பல சிரமங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது. தபாலகத்தில் கடந்த பல வருடங்களாக இந்தக் குறைபாடு இருந்து வருகிறது. இதனை நிவர்த்தி செய்ய அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

வ. செல்லத்துரை
கோண்டாவில்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில்

## உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலை ஊக்குவிக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஆக:29

வடக்கு — கிழக்கு மாகாண அரச, வடக்கு கிழக்குப்பகுதிகளில் கைத்தொழிற்சாலைகளை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியவருகிறது:

உள்நாட்டில் கிடைக்கக் கூடிய மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக் கூடிய கைத்தொழில்களை ஊக்குவிக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது:

இவ்வாறான கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட விரும்பும் பொதுஸ்தாபனங்கள் தமது திட்டங்களை விரிவான முறையில் அறிக்கை வடிவில் தயாரித்து அதற்குத் தேவைப்படும் நிதிஅளவினையும் வரையறுத்து அவற்றினை அவ்வப்பகுதி உதவி அரச அதிபர்கள் ஊடாக தமக்கு அனுப்பி வைக்கவேண்டுமென மாகாண அரசு கோரியுள்ளது. (க-13)

### குடிதண்ணீர் கிணறுகள்

ஊர்காவற்றுறை ஆக 29

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் அடங்கும் குடிதண்ணீர் கிணறுகளை சுத்தம் செய்து தேவையான இறைக்கும் கருவிகளை இணைத்து மக்களுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் புனர்வாழ்வு நிலையப் பிரதிநிதிகள் அண்மையில் இப்பகுதியிலுள்ள குடிதண்ணீர் கிணறுகளைபார்வையிட்டுள்ளதாகவும் விரைவில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-16)

காங்கேசன் மக்கள் வங்கி:

## இரு கட்டங்களாக நகை மீளளிப்பு

காங்கேசன்துறை, ஆக 29

காங்கேசன்துறை மக்கள் வங்கியில் நகை அடகு வைத்தவர்களுக்கு இரண்டு கட்டங்களாக நகைகள் மீளளிக்கப்பட உள்ளன.

மேற்படி வங்கியில் 31-8-89 வரை நகைகளை அடகு வைத்து 28-2-89 வரை வட்டியையும், முதலையும் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு 1-9-89 வெள்ளிக்கிழமையும் 4-9-89 திங்கட்கிழமையும் அவ்வங்கியில் வைத்து நகைகள் மீளளிக்கப்பட உள்ளன:

28-2-89 க்குப் பின்னர் வட்டியையும் முதலையும் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு இரண்டாம் கட்டமாக நகைகள் மீளளிக்கப்படுமெனவும் அதற்கான திகதி அறிவிக்கப் படுமெனவும் வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

நகைகளை மீளப்பெற வருவோர் தமது தேசிய அடையாளக் கார்ட், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு, வங்கியால் அனுப்பப்பட்ட கடிதம் ஆகிய ஆவணங்களுடன் வந்து நகைகளை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு கோரப் பட்டுள்ளது. (இ-68)

## கந்தசஷ்டி காலத்தில் உயிர்ப்பாதுகாப்பு வாரம்

### ஐ. நா. விடம் கோரப்படும்

யாழ்ப்பாணம், ஆக 29

சைவமக்களின் முக்கியவிரத காலங்களில் ஒன்றான கந்த சஷ்டி வேளையான ஒக்டோபர் 30ஆம் திகதி முதல் நவம்பர் 4ஆம் திகதி வரை ''உலக உயிர் பாதுகாப்பு'' வாரமாக பிரகடனம் செய்யும்படி ஐ. நா. சபையை யாழ்ப்பாண இந்து இளைஞர் பேரவை கேட்கவிருக்கிறது.

பேரவையின் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம்பற்றி ஆராயப்பட்டது. உ[illegible] காப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இவ்வாரத்தை உலகம் முழுவதிலும் அனுஷ்டிக்கும்படி ஐ. நா. சபையிடம் உலகில் உள்ள இந்து அமைப்புக்களிடமும் கோருவதென முடிவு செய்யப்பட்டது.

இது சம்பந்தமான மகஜர்களை அடுத்த வாரமளவில் இந்து இளைஞர் பேரவை அனுப்பவிருப்பதாக பேரவைத் தலைவர் திரு. வே. க. தனபாலன் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-3)

### உபவேந்தர்கள் மாநாடு

யாழ்ப்பாணம், ஆக 29

பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராயும் பொருட்டு உப- வேந்தர்களின் மாநாடு எதிர்வரும் இரண்டாம் திகதி கொழும்பில் நடைபெற இருக்கிறது.

## கண்டதும் கேட்டதும்

இன்று ஐ. கி. என்றால் எல்லோருக்கும் தெரியும் ஐடென்ரிற்றிக் காட் என்று. தேசிய அடையாளக் கார்ட்டைத் தான் இது குறிக்கிறன்து.

எதை விட்டுப் போனாலும் போகலாம், அடையாளக் கார்ட்டை விட்டு வீட்டிலிருந்து வெளியே போகக் கூடாது எங்களுடைய ஓர் அங்கமாகிவிட்டது அடையாளக்கார்ட்.

அடையாளக் கார்ட்டின் முக்கியத்தை விளக்கி எமது வாசகர் ஒருவர் எழுதியுள்ளார்.

''இந்தக் கால கட்டத்தில் எமது மனைவி: பிள்ளைகளை விட, உறவினர்களை விட காணி செத்துகளை விட முக்கியமானது, முதுகெலும்பு போன்றது அடையாளக் கார்ட். அது எங்கள் உயிர் நாடித் துடிப்பைப் போன்றது.'' என்று அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தேசியரீதியான அடையாளக்கார்ட்டின் வரலாறு 20 ஆண்டுகளுக்கு உட்பட்டது தான். ஆரம்பத்தில் தென் இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக இலங்கைக்கு வருபவர்களைத் தடுக்கத்தான் அடையாளக் கார்ட் பாவிக்கப்பட்டது.

பின்னர் 71 ஜே. வி. பி. கிளர்ச்சியின் போது இளைஞர்களைப் பிடிக்க ஸ்ரீமாவோ அம்மையார் அடையாளக்கார்ட் முறையைப் பரவலாக்கினார்;

தற்பொழுது அடையாளக் கார்ட் எதற்கும் தேவையான ஒரு பொருளாகிவிட்டது

என்ன விஷயங்களைத் தடுக்க அது முதலில் அறிமுகம் செய்யப்பட்டதோ அவற்றில் எதையும் அதனால் தடுக்க முடியவில்லை.

ஆனால் மக்களைப் படாதபாடு படுத்துகின்றது:

—செய்தி லோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவு விலையில் அறிமுகம்!
**CHILTON TRIP SWITCH**
மின்பொறியியலில் புகழ் மிக்க
OTTERMILL CHILTON LTD
ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு
**சுந்தர்சன்**
சந்தை முன் மானிப்பாய்
(ரு/சா/சா)

## மண்டைதீவு கடலில் மீனவர் போட்டா போட்டி

### ஒரு வருடத்தின் பின்னர் தொழில்களை ஆரம்பிப்பதற்கு

குருநகர், ஆக. 29

மண்டைதீவு மினி முகாம் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் தமது தொழில்களை ஆரம்பிப்பதற்கு மீனவர்கள் போட்டிபோட்டு வருகின்றனர்.

இப்பகுதியில் தொழில் செய்து வந்த கடற்தொழிலாளர்களை மறு அறிவித்தல் வரை அப்பகுதிக் கடலில் இறங்கக்கூடாதென்று கடந்த வருடம் ஜூன் மாதம் பிற்பகுதியில் அமைதிப்படையினர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

அன்றில் இருந்து இப்பகுதிக்கு மீனவர்கள் எவரும் செல்வதில்லை.

தற்போது அமைதிப்படையினர் வெளியேறி உள்ளதால் மீனவர்கள் பெரும் அளவு அப்பகுதிக்குப் படையெடுத்து வருவதையும் போட்டிபோட்டுக்கொண்டு தமது தொழில்களை நிறுவுவதில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. (இ-51)

## பனம்பொருள் அபிவிருத்திச் சபை முயற்சிக்கு அரச நிதி போதாது

### செய்தியாளர் மாநாட்டில் தகவல்

யாழ்ப்பாணம், ஆக. 29

யாழ். பனம்பொருள் அபிவிருத்திச் சபை வடக்கு கிழக்கு பகுதியில் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதுடன் பல புதிய பொருள்களையும் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

ஆயினும் இந்த முயற்சிகளைப் பூரணமாக மேற்கொள்ள வழங்கப்படும் அரச நிதி குறைவானதாகவே இருக்கிறது.

நிதிகளை அரசாங்கம் அல்லது வெளிநாட்டுத் தாபனங்கள் வழங்குமாயின் விசேடமாக எமது மாகாண அரசு மூலமாக நாம் விடுத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமாயின் பல ஆயிரக்கணக்கானோருக்கு எம்மால் வேலை வாய்ப்புக்களை வழங்க முடியும்.

இவ்வாறு யாழ். பனை அபிவிருத்திச் சபையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கருத்து வெளியிடப்பட்டது. இந்த மாநாடு சனிக்கிழமை யாழ். கண்டி வீதியில் உள்ள சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

மாநாட்டில் தெங்கு பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் செயலாளர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, பரிசோதனை உத்தியோகத்தர் திருமதி யோகநாதன், நிர்வாக உத்தியோகத்தர் க. இராசரத்தினம் விரிவாக்க உத்தியோகத்தர் கி மகேந்திரன், சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் பி. திவ்யராஜா, ஆராய்ச்சி உத்தியோகத்தர் இ. குகநேசன், உற்பத்தி உத்தியோகத்தர் சிவகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பனம் பொருள்களில் தயாரிக்கப்படும் அலங்காரப் பொருள்களுக்குக் கொழும்பில் ஏக கிராக்கி நிலவுகிறது. இவற்றின் விற்பனையால் கொழும்பில் உள்ள பனம் பொருள் உற்பத்தி விற்பனை நிலையமான கற்பகம் வருடமொன்றுக்கு 2 லட்சம் ரூபாவை வருமானமாக ஈட்டித் தருகிறது என இம் மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

உலகத்திலேயே இலங்கையில் மட்டும் அதுவும் பனை அபிவிருத்திச்சபை மட்டுமே பனம் பழத்திலிருந்து பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்து வருகிறது. தற்போது பனம் பழத்திலிருந்து மதுசாரம் உற்பத்தி செய்வது பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

பனம் பழத்திலிருந்து தயாரிக்கப்படும் குடிபானம் தயாரிக்கப்பட்டு ஜேர்மன் நாட்டுக்கு ஆராய்ச்சிக்கு அனுப்பப்பட்டது. அங்கிருந்து கிடைத்த பெறுபேறுகளின்படி பிரஸ்தாப பானத்தில் உடலுக்கு ஊறு விளைவிக்கும் அல்லது போதை ஏற்றக்கூடிய எந்த பொருள்களும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது

இதனை அடுத்து ஜேர்மன் தொழில் நுட்ப ஆலோசனையுடன் பிரஸ்தாப பான உற்பத்தி வெகுவிரைவில் இங்கு ஆரம்பிக்கப்பட உள்ளது.

இப்படி பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (இ-க-9)

## அகதிகள்

கொக்குவில், ஆக. 29

வதிரி, அல்வாய், பொலிகண்டிப் பகுதியைச் சேர்ந்த ஏராளமான மக்கள் அரியாலைப் பகுதியில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர். [இ-69]

## பரீட்சகர்களுக்கு ஆணையாளர் கடிதம்

மானிப்பாய், ஆக. 29

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி. சி. ஈ சாதாரண தரப் பரீட்சையில் விடைத்தாள் பரீட்சகர்களாகக் கடமையாற்றிய சகல பரீட்சகர்களுக்கும் அவர்களின் விவரங்களை மீளாய்வு செய்யும் பொருட்டு பரீட்சை ஆணையாளர் ஒரு ஆதர் வெதமுள்ள கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளார்.

எதிர்வரும் பரீட்சையின் போது விடைத்தாள் பரீட்சகர்களாக அவர்களை நியமனம் செய்வதற்கும், புதிய பரீட்சகர்களை நியமனம் செய்வதற்கும் மேற்படி விவரம் திரட்டப்படுகிறது.

கடந்த காலங்களில் விடைத்தாள் பரீட்சகர்களாகக் கடமையாற்றியோரும், புதிதாகக் கடமையாற்ற விரும்பும் தகுதியுடைய ஆசிரியர்களும் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக தத்தம் பாடசாலை அதிபர்கள் மூலமாக அனுப்பி வைக்குமாறும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

### சாவகச்சேரி நகரசபை

## கேள்வி அறிவித்தல்

**சாவகச்சேரி பஸ் நிலையத்தின் முன்பாகக் கட்டப்பட்டுள்ள கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை**

1. சாவகச்சேரி பஸ் நிலையத்தின் முன்பாகக் கட்டப்பட்டுள்ள 10 கடைகளிலும் வியாபாரம் செய்யும் உரிமைக்கான. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 12 - 09 - 89 ஆந் திகதி பிற்பகல் 4-15 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. கேள்விப் பத்திரங்கள் 11-09-89 ஆம் திகதி பிற்பகல் 12-30 மணி வரை கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 100/- ம், மீளளிப்புச் செய்யப்படும் கேள்விப் பாதுகாப்பு வைப்புப் பணமாக ரூபா 1000/- ம் செலுத்துபவர்களுக்கே வழங்கப்படும்.
3. நிரப்பப்பட்ட கேள்விகள் குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக ''தலைவர். நகரசபை, சாவகச்சேரி'' என முகவரியிடப்பட்டு, உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கடைகளுக்கான கேள்வி'' எனக் குறிப்பிடப்பட்டு, பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது இச்சபையின் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்படல் வேண்டும்.
4. தற்பொழுது இந்நகர சபையின் கடைகளில் ஏதாவது ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட வாடகைக்காரராக இருப்பவருக்கோ அல்லது அன்னாரது கணவன் / மனைவி எவருக்கேனும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.
5. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் சபையினால் அங்கீகரிக்கப்படும் முறையிலான கதவுகளைத் தங்களது செலவில் தயாரித்துப் பொருத்துதல் வேண்டும்.
6. கடைகளைத் தெரிவுசெய்யும் முன்னுரிமை, கூடிய கேள்வியின் அடிப்படையில் வழங்கப்படும்.
7. தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் கடையைப் பொறுப்பேற்காதுவிடில், அவரது கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப் படமாட்டாது
8. ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.
9. மேற்படி கடைகளில் கீழ்வரும் வியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
   (அ) பலசரக்கு வியாபாரம்
   (ஆ) தேநீர்க் கடை
   (இ) மீன் / இறைச்சி / கருவாடு / இவைமுதலியன விற்பனை செய்தல்;
10. கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைக்குப் பூரண அதிகாரமுண்டு.
11. ஒவ்வொரு கடையின் ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 50,000/- ஆகும்.
12. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

த. நவரத்தினராசா
தலைவருக்காக,
நகர சபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
23 - 08 - 1989

(சி- 3570)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தசாமி செல்லம்மா (கனகம்மா)**

தோற்றம்: 07 - 02 - 1936
மறைவு: 29 - 08 - 1987

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்

[1746]

## ஓராண்டு நினைவஞ்சலி



**திரு. இளையதம்பி மகேசன்**

தோற்றம்! 24 07 1930
மறைவு: 10 - 09 - 1988

திதி: 29 - 08 - 1989

10 - 09 - 1988 இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் முதலாவது ஆண்டுத்திதித் தினத்தில் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சித்தி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், மனைவி, பிள்ளைகள்.

டச்றோட்,
தெல்லிப்பளை.

[1825]

**சிங்கர்**

தீவெங்கிலும் ஏகவிநியோக உரிமை பெற்றுள்ள அற்புதமான

**'பட்றி' தராசுகள்**




'பட்றி' தராசுகள் உறுதி மிக்கவை. வசதியான அளவுடையவை. அதிக பாரம் நிறுக்கக்கூடியவை. மொத்த வியாபார நிலையங்கள், களஞ்சியங்கள் மற்றும் கடைகளுக்கு உகந்தவை.

'பட்றி' தராசுகளை சிங்கர் விற்பனை நிலையங்களிலும் தீவெங்குமுள்ள அதிகாரம்பெற்ற வியாபாரிகளிடமும் வாங்கலாம்.

50 கிலோ - ரூ. 925/-
100 கிலோ - ரூ. 975/-
செனெவ் 50 கிலோ - ரூ. 1600/-

சிங்கர்(ஸ்ரீ லங்கா)லிமிட்டெட்
83, சதாம் வீதி கொழும்பு 1.

விவசாயப் பிரிவு
சிங்கர்
மாசற்ற மேன்மை

Minds/SA/12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் முருகா
சித்திரத் தேரேறிப் பவனி வரும்
எங்கள் நல்லூர்க் கந்தனே!
உந்தன் பாதம ரி சரண்புகுந்தோம்
காப்பாய் நீயே!

# அக்ரோ சென்ரர்

இல. 234/4, ஸ்ரான்லி வீதி,
**யாழ்ப்பாணம்.**
(ஸ்ரீதர் படமாளிகை முன்பாக)

பவர் ஸ்பிரேயர், மேல் துலா ஸ்பிரேயர் (லசனு)
அதன் உதிரிப்பாகங்களும்
வெளிநாட்டு உள்நாட்டு விதை வகைகளும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
மற்றும்
Honda Motor Cycle
உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம்:
[1815]


★ பஞ்சாப் மாநிலக் கிளர்ச்சி

# ஓடும் ரயிலை நிறுத்தி சீக்கியத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 20 பயணிகள் மரணம்!

## ஆகஸ்டில் மட்டும் 200 பேர் மரணம்

சண்டிகார், ஆக 28

பஞ்சாப் மாநிலத்தின் வடமேற்குப் பகுதியில் ஓடும்ரயிலை நிறுத்தி அதில் பயணம் செய்தவர்கள்மீது சீக்கியத் தீவிரவாதிகள் சுட்டதில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

30 பயணிகள்வரை காயமடைந்தனர்.

சினத் தயாரிப்பு ஆயுதங்களுடன் ரயில்பெட்டிகளுக்குள் நுழைந்ததீவிரவாதிகள் பத்து நிமிடங்களுக்கு மேலாக சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்:

அப்போது பயணிகள் பெட்டிகளில் இருந்து குதித்து வயல்வெளி ஊடாகத் தப்பி ஓ - முயற்சித்தனர். அவர்கள்மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

### 75பேர் கொலை?

யு என் ஐ செய்தி ஸ்தாபனத்தின் அறிக்கைப்படி இத் தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 75 ஆக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

### ஆகஸ்டில் 200 பேர் கொலை

பஞ்சாப்மாநிலத்தில் சீக்கிய தீவிரவாதிகளின் வன்செயல்கள் காரணமாக இம்மாத ஆரம்பத்தில் இருந்து இதுவரை 200க்கு அதிகமானோர் இறந்துவிட்டனர்:

### வருட ஆரம்பத்தில் இருந்து

வருட ஆரம்பத்தில் இருந்து இதுவரை (எட்டு மாதங்கள் என்று சொல்லலாம்.

தி. மு. க. அமைச்சர் பொன். முத்துராமலிங்கம்

ளில்) உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 400ஐத் தாண்டிவிட்டது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

'காலிஸ்தான்' தனி நாடு கோரி சீக்கியத் தீவிரவாதிகள் ஆயுதக் கிளர்ச்சி நடத்திவருவது தெரிந்ததே. (எ)

# பீகிங்கில் நடைபெற இருந்த யுனெஸ்கோ மாநாடு ரத்து!

பீகிங், ஆக 28

பீகிங்கில் நேற்று (திங்கள்) ஆரம்பமாகவிருந்த யுனெஸ்கோவின் விசேட மாநாடு ஒன்று நவம்பர் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

21ஆம் நூற்றுண்டில் கல்வி வளர்ச்சி - என்ற தலைப்பில் ஆறுநாள் யுனெஸ்கோவின் மாநாடே இப்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது:

கடந்த ஜூனில் பீகிங்கில் நடந்த படுகொலைகளால் இம் மாநாட்டில் கலந்துகொள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தயக்கம் காட்டுவதே இந்த ஒத்திவைப்பிற்குக் காரணமாகும்: (எ)

## 'போடோ' இன பேச்சுக்கள்

புதுடில்லி, ஆக. 28

அஸாம் மாநிலத்தில் போடோலாந்து நாடு கோரி போடோ இனமக்கள் நடத்தும் ஆயுதக் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பான முத்தரப்புப் பேச்சுக்கள் இன்று புதுடில்லியில் ஆரம்பமானது (எ)

## கலைஞருக்கு பாராட்டு

வேலூர், ஆக. 28

கலைஞர் மு. கருணாநிதியை முதலமைச்சர் என்றழைப்பதை விட சமூக விஞ்ஞானி வாலாஜாபேட்டையில்நடந்த ஒரு கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு சொன்னார்:

கலைஞர் ஏழை, எளிய மக்களின் நாடி நரம்புகளை தொட்டுப்பார்த்து அவர்களுக்கு ஆதரவு தருகிற திட்டங்களைத் தீட்டிவருகிறார்:

இப்படி அமைச்சர் மேலும் சொன்னார். (எ)

## நிபந்தனை

அமெரிக்கத் துருப்புக்களை வைத்துக் கொள்ள விரும்பும் ஜப்பான், தென்கொரியா மற்றும் ஆசிய நாடுகள் அதற்கான செலவினங்களையும் பொறுத்துக் கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது என்று அமெரிக்க செனட்டின் ஆயுதப்படை விவகாரம் சம்பந்தமான கமிட்டிக் கூட்டத்தில் செனட்டர் திருமதி பட்ரிஷியா ஷ்ரோடர் தெரிவித்தார்:

சுதந்திர உலக நாடுகளின் பாதுகாப்புக்காக அமெரிக்கா செலவழித்த காலம் மலையேறிவிட்டதாகவும் கூட்டத்தில் அவர் தெரிவித்தார். (எ)

# குறளின் பெருமை பற்றி குன்றக்குடி அடிகளார்!

பாண்டிச்சேரி, ஆக. 28

நிர்வாகத்துறை விஞ்ஞானம் பற்றி தமிழ்மொழியில் பாண்டிச்சேரியில்நடந்த 2நாள் கருத்தரங்கை தவத்திரு குன்றக்குடி அடிகளார் தொடக்கி வைத்தார்.

பாண்டிச்சேரி பல்கலைக் கழகமும் காரைக்குடி மத்திய எலக்ரோகெமிக்கல் நிலையமும் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தது

திருக்குறளில் அறிவின் பல அம்சங்கள் பொதிந்து உள்ளன. எத்தனை பேர் அவற்றைத் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வருகிறார்கள்?

விஞ்ஞான பூர்வமான நோக்கு சமூக அடிமட்டம் வரைபரவவேண்டும்.

விஞ்ஞானக் கருத்துக்கள் சாதாரண மக்கள் மத்தியில் தமிழ்மொழியில் பரப்பப்படும் சூழ் நிலை உருவாக வேண்டும்

இப்படி குன்றக்குடி அடிகளார் சொன்னார். (எ)

## மக்கள் சீனவிலும் அணு விபத்து

பீகிங், ஆக. 28

சீனவில் 1980 முதல் 1985 வரையான ஐந்து ஆண்டுகளில் ஏற்பட்ட அணுவிபத்துக்களில் 20 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்து 200 பேர் பாதிக்கப்பட்டனர்.

கதிர்வீச்சு தன்மையுள்ள பொருட்களைக் கையாள்வதில் கவனக்குறைவாக நடந்து கொண்டதே இந்த மாதிரி விபத்துக்களுக்கு காரணம் என்று சீன அரசின் அதிகார பூர்வ பத்திரிகை கூறுகிறது: (எ)

## மைக்டைஸனுக்கு 300 கோடி ரூபா

லண்டன் ஆக 28

பிரபல குத்துச் சண்டை வீரர் மைக் டைஸனுக்கு முந்நூறு கோடி ரூபா பணம் கொடுக்க இங்கிலாந்திலுள்ள ஒரு தனியார் நிறுவனம் முன் வந்துள்ளது:

இது குறித்து அந்த நிறுவனம்மைக் டைஸனுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

ஆனல் ஒரு நிபந்தனை. ஓர் ஆண்டு காலத்திற்கு அந்த நிறுவனம் சார்பில் நடத்தப்படும் குத்துச்சண்டைப் போட்டிகளில் மட்டுமே மைக் டைஸன் பங்கேற்க வேண்டும் என்று கடிதத்தில் கூறப்பட்டு உள்ளது:


## முதலாவது ★பிறந்தநாள் வாழ்த்து★



**செல்வன் லோ. திவாகர்**

வேலணை மேற்கைச் சேர்ந்த லோகநாதன் கலாமணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் திவாகர் தனது முதலாவது பிறந்த தினத்தை 29-08-89 (செவ்வாய்) இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றுர்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மாமார், ஆசை அப்பா, ஆசை அம்மா, இளையப்பா, இளையம்மா, சித்தப்பாமார், சித்திமார், பெரியமாமார், பெரிய அத்தைமார், குஞ்சத்தை, ரத்தினகம சின்னமாமா, சின்னத்தை, ஆசை மாமா, ஆசை அத்தை, கனடா சித்தப்பா, சித்தி, தங்கை நிஷா, பிரான்ஸ் செல்வமாமா, அத்தை, நதிகரன், சுஜன், ராசன் மாமா, அத்தை, பாலன் மாமா (சுவிஸ்), அண்ணமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் மகா கணபதியின் அருளாலும் சிற்பனை முருகன் அருளாலும் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் நீடுழி வாழ வாழ்த்துகின்றுர்கள்.

(1752)

''தொல்லை வினை தீர்க்குப் நல்லைநகர்க் கந்தனே!
இல்லையெனது எமக்கு நீ இன்னருள் தருவாய்!
தேர் ஏறிவரும் உன் திருவருட் காட்சியைக்காண நினைந்து நகும்''

# "நிரோஷன் என்ரபிறைசஸ்"

பருத்தித்துறை வீதி, மயிலிட்டி,
**காங்கேசன்துறை.**
(T. B வைத்தியசாலை அருகில்)

"நாவலர்"
சித்தங்கேணி.

**O/L DAY CLASS**
ஆரம்பமாகியுள்ளது.

**கணிதப்:**
U. குமம்

**விஞ்ஞானம்:**
J. R. சூரி

ஏனைய சகல பாடங்களும் நடைபெறுகின்றன.
(1762)

# வாழ்வொளி நிலையம்

பண்டத்தரிப்பு.

மூன்றும் தவணைக்கான பயிற்சி நெறி ஆரம்பமாகி விட்டது. மாணவிகள் வந்து பங்குபற்றவும்
புதிய பயிற்சி நெறி
புரட்டாதி முதலாம் திகதி ஆரம்பமாகும்.
விண்ணப்பங்களைத் தலைவியிடம் சமர்ப்பிக்கவும்.
— நிலையத்தலைவி

தி. கு. கன்னியர் மடம்,
பண்டத்தரிப்பு.
(1761)

★ ரெருசோ ★

மூலப் பொருள்கள் விற்பனை

- ✶ வெளிநாட்டு சிப்ஸ்
- ✶ கலர் பவுடர் வகைகள்
- ✶ வெள்ளைச் சீமெந்து
- ✶ மற்றும் தேவையான பொருள்கள்

ரெருசோ மாபிள் பதிக்கும் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

# மாபிள்ஸ்

281 - D, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/3509)

# ★ திருமண சேவை ★

**மணப் பெண்கள் தேவை**

B. Com ஆசிரியர், Accountant, Engineers ஆகியோருக்கும் கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சலாந்து ஆகிய இடங்களில் தொழில் புரியும் ஆண்களுக்கும் மணப் பெண்கள் தேவை.

**மண மகன்கள் தேவை**

7 இல் 8 இல் செவ்வாய் உள்ள பெண்களுக்கும் 37 வயதிற்கு மேற்பட்ட நல்ல சீதனம் உள்ள பெண்களுக்கும் Doctor, B. Sc, B. A பெண்களுக்கும் மண மகன்கள் தேவை.

சைவப் பெண்களுக்கும் ஏற்ற மண மகன்கள் தேவை:

★ இரண்டாம் தாரம் திருமணம் செய்ய விரும்புவோர் தேவை:

உடன் பதிவு செய்து பலனடையுங்கள்

சந்திக்கும் நேரம்:- காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை

**சோதிடம்**

திருமணப்பொருத்தம், சாதகம் குறிப்பு கணித்தல், பலன் பார்த்தல் ஆகியவற்றிற்கு எமது சோதிடரைச் சந்தியுங்கள்.

**விற்பனைக்கு**

சிசில் குளிர்சாதனப் பெட்டி — 60 க. அடி உடன் விற்பனைக்குண்டு.

**கமல்ஸ் சேர்விஸ் & ரேடிங்ஸ்**

நாகம்மா பில்டிங்ஸ்
டில்கா முதல் மாடி (பஸ் நிலைய முன்பாக)
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்:
[கி-3562]


## பெரியவிளான் பண்ணைக்காணி கேள்விப்பத்திர விற்பனை

1. பெரியவிளான் சந்தியிலிருந்து 150 யாருக்கு அப்பால் பண்டத்தரிப்பை நோக்கிச் செல்லுகின்ற பிரதான வீதி மேற்குப் பக்கமாக 17½ பரப்பைக் கொண்ட முந்திரிகைத் தோட்டப் பண்ணைக்காணி விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் யாவும் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும், கேள்விப் பத்திரங்கள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'காணிக்கான கேள்விப்பத்திரம்' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் முத்திரையிடப்பட்டு பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்; விண்ணப்பப்பத்திரங்கள் 01 - 09 - 1989 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கிடைக்கப்பெறும் கேள்விகளை முற்றாகவோ, அன்றேல் தனித்தனியாகவோ நிராகரிக்கும் உரிமை குறிப்பிட்ட சங்கத்திற்கு உண்டு.

— பொது முகாமையாளர்
பண்டத்தரிப்புப் பரிஷ் ப நோ கூ சங்கம்,
பண்டத்தரிப்பு.
(கி-3579)

# ஓராண்டு நினைவஞ்சலி



**சி, வாமன் (கெனடி)**

உதயம்: 26- 03- 1968 மண்ணில்: 29- 08- 1988

நீ மறைந்து ஓராண்டு ஆனாலும்
நின் நினைவு நெஞ்சத்தில் நீங்காது!
உன் ஆத்மா சாந்தியடைய சகலரும் இறைவனை வேண்டுகின்றோம்;

— அரியாலை மக்கள்.

17/2, அருளம்பலம் லேன்,
அரியாலை.
(1839)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ரலச் சேவையில் பரிட்சையமான
நவீன ஸ்தாபனம்!
★ எம்பாமிங் ★ பிரேதப் பெட்டிகள்
ஊர்வல வாகனங்கள் சேவையில்

✶

பிறைற் ஹவுஸ்
[யாகப்பர் ஆலய அருகில்]
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



# உதயன்

29 . 08 . 1989 செவ்வாய்க்கிழமை



குளிக்குள் பிரேதம் இறக்கும் இயந்திரம்,
'டிவைஸ்', ஒப்பின் காஸ்கற்ஸ்,
குறஸ் காஸ்கற்ஸ், மலர் வளையங்கள்

✶

பிறைற் ஹவுஸ்
[யாகப்பர் ஆலய அருகில்]
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


## அதிகாரப் பரவலாக்கலை துரிதப்படுத்துவதற்கு

# இரு நாடுகளும் கருத்து உடன்பாடு

### இந்திய தூதர் பேட்டி

கொழும்பு, ஆக. 29

கொழும்பில் உள்ள இந்தியத்தூதர் திரு எல். எல். மெஹ்ரோத்திரா கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி வருமாறு;

கேள்வி; டிசம்பருக்கு முன்னர் அமைதிப்படையை திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டும் என்று இலங்கை வற்புறுத்தும் போல் தெரிகிறது.

தூதர்: தங்களின் பாதுகாப்பும் பந்தோபஸ்தும் உறுதிபடுத்தப்பட்டதாக வடக்கு கிழக்கு மக்கள் உணரும்நிலை ஏற்பட்டவுடன் அமைதிப்படையினர் திரும்புவதைத் துரிதப்படுத்த முடியும்

கேள்வி: அந்த 'உணரும் நிலையை' எப்படி ஏற்படுத்துவது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

தூதர்: புதுடில்லிப் பேச்சுக்களின் அந்த உணரும் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பது பற்றி இருநாடுகளுக்கும் இடையேபொதுவான கருத்து உடன்பாடு காணப்பட்டது.

மாகாணசபையும் அதன் முதலமைச்சரும் பலனளிக்கக் கூடிய விதத்தில் செயற்படக் கூடிய முறையில் அதிகாரப் பரவலாக்கலை துரிதப்படுத்த வேண்டும். என்பதில் தான் கருத்து உடன்பாடு காணப்பட்டது.

அதிகாரப்பகிர்வு நடைமுறைப்படுத்தப்படுவதை மாகாணசபை, அதன் முதலமைச்சர் ஆகியோருடன் கலந்தாலோசித்துத் துரிதப்படுத்தப்படும். என்று நாம் நம்புகின்றோம்.

இது வடக்கு-கிழக்கு மக்கள் மனதில் நம்பிக்கை உணர்வை ஏற்படுத்தும் ஒன்றென்று நடவடிக்கையாகும்.

மக்களின்தேவைகளை நிறைவேற்றும் அளவுக்கு தனக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்றுமுதலமைச்சர் கருதினால் அமைதிப்படை திரும்பிய வுடன் தமது அலுவலை நாமே நிர்வாகித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை வடக்கு - கிழக்கு மக்கள் ஏற்படவில்லை என்று தான் கொள்ள வேண்டும்;

கேள்வி: அமைதிப்படையை விலக்குவது பற்றி இந்திய அரசின் நிலைப்பாடு என்ன?

தூதர்:எமது நிலை தெளிவானது அமைதிப்படை இலங்கை வந்து சேர நீண்ட காலம் எடுத்தது திருப்பி அழைப்பதுஎன்பது நீண்டகாலமே எடுக்கும் பிரிவு பிரிவாகவே அமைதிப்படையை திருப்பி அழைக்க முடியும்

வாராவாரம் பல கப்பல்களைப் பயன்படுத்தி அமைதிப்படையைத் திருப்பி அனுப்புவது என்றாலும், அதற்கு குறைந்தது 30 வாரங்கள் வரை செல்லும்

கேள்வி: இந்தியப் பிரசைகளுக்கு விடுக்கப்பட்டுள்ள பயமுறுத்தல் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

தூதர்: இந்தியப் பிரசைகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது இலங்கை அரசின் பொறுப்பு:

கேள்வி: அப்படியானால் விமானமூலம் கொழும்புக்கு இந்திய வீரர்களை ஏன் வரவழைத்தீர்கள்?

தூதர்: இலங்கை அரசின் எமக்கு நம்பிக்கையில்லாமல் நாம் இந்திய வீரர்களை வரவழைக்கவில்லை இந்தியத் தூதரகத்தின் உள் பாதுகாப்பு நடவடிக்கையைப்பலப்படுத்தவே இலங்கை அரசின் சம்மதத்துடன் சுமார் 100 ஜவான்களைவரவழைத்தோம். அவர்கள்இன்னமும் கொழும்பில் தான் தங்கி இருக்கின்றனர். (த-எ)

### தென்னிலங்கை ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை நடத்தக்கூடும் என்ற தகவலைத் தொடர்ந்தே உஷார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

#### பெண் பொலீஸும் குடும்பமும் கொலை

அதேசமயம் கொழும்பு நகருக்கு வெளியே இனந்தெரியாதவர்கள் 18 வயது பெண் பொலிஸ் ஒருத்தியைச் சுட்டுக் கொன்றனர். அப்பெண்ணின் வீட்டின் மீது அதன் பின்னர் நடத்தப்பட்ட தாக்குதலில் பெண்ணின் பெற்றோர்கள், சகோதர, சகோதரிகள் ஆகியோர் உயிரிழந்தனர்.

அம்பாந்தோட்டையில் பொலிஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டார்:

தென்பகுதியில் நேற்று பதினைந்து பேரின் எரியுண்ட சடலங்கள் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (அ-எ)

## கல்வி நிறுவன பிரதிநிதிகள் மா.சபை உறுப்பினர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஆக. 29

யாழ். மாவட்டத்தில்உள்ள தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் பிரதிநிதிகளின் தூதுக்குழுவினர் நேற்று மாலை ஈ. பி. ஆர். எல்; எவ்வைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர் திரு. கே. ரவீந்திரனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இது தொடர்பாக ஈ. பி ஆர். எல். எப்; விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது;

ஈ; பி ஆர்; எல்; எப்பின் யாழ் காரியாலயத்தில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையின் போது இன்றைய அரசியல் சூழ்நிலையில் மாணவர்களின் எதிர்காலம், பாடசாலைகள் இயங்கவேண்டியதன் அவசியம் என்பன தொடர்பாகவும், மாணவர்களின் கல்விக்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியதின் அவசியம் குறித்தும் ஆராயப்பட்டன:

இன்றைய தென்னிலங்கை நிலவரங்களுக்காக வடக்கு— கிழக்கு பகுதியின் பாடசாலைகள் மூடப்படும் நிலையைக் கவனத்தில் எடுத்தே மாகாண அரசு பாடசாலைகளை திறக்க நடவடிக்கை மேற்கொண்டது ...தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறிய திரு. ரவீந்திரன், தென்னிலங்கை போன்ற அமைதியற்ற ஒரு சூழ்நிலையை இங்கும் உருவாக்க முனைந்து நிற்பவர்கள் மாணவர்களை பாடசாலைகளுக்குச் செல்ல விடாமல் பயமுறுத்தித் தடுத்து வருகின்றனர், இதே சமயம் பாடசாலை மாணவர்களின் சீருடைகளையும் கல்வி நிறுவனங்களையும் கவசமாக பாவித்து இந்திய அமைதிப்படையினரைத் தாக்க முற்படும் சமயங்களிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் பாதிப்புக் உள்ளாகின்றனர் என்பதையும் உதாரணத்துக்குப் பல சம்பவங்களையும் சுட்டிக்காட்டினார்.

பாடசாலை செல்லும் மாணவர்களின் கல்விக்கு ஈ பி. ஆர். எல். எப் எக்காலத்திலும் இடையூறாக இருக்க மாட்டாது எனவும் அதே சமயம் கல்விக் கூடங்களை சமூக விரோத நடவடிக்கைகளுக்காக பாவிக்க எக் காரணம் கொண்டும் அனுமதிக்க வேண்டாம் எனவும் ஒன்றிய நிர்வாகிகளிடம் அவர் வேண்டிக் கொண்டார்;

நெருக்கடிகள் நிறைந்த காலத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் ஆற்றிய பங்கு பணிகளை நினைவு கூர்ந்ததுடன் சிங்கள பேரினவாத அரசு தமிழ் பேசும் மாணவர்களின் கல்வியை தரப்படுத்தல் மூலம் மட்டம் தட்ட முனைந்த வேளை தனியார் கல்வி நிறுவனங்கள் அதனை ஒரு சவாலாக ஏற்று அதற்கெதிராக நடத்திய போராட்டங்கள் வரலாற்றில் இடம் பெறும் எனவும் பாராட்டினார். இரு தரப்பினருக்கும் இடையேயும் நடந்த பேச்சுவார்த்தைகள் பயனுள்ளதாகவும் பரஸ்பர புரிந்துணர்வோடும் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. —எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது;

### மானிப்பாயில் நாளை நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக. 29

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள உயரப்புலம் கிராம சேவையாளர் [J/63] பிரிவுக்கான மீளக்குடியமர்தல் நிவாரணக் கொடுப்பனவுகள் நாளை வழங்கப்பட உள்ளன.

நாளை 483 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். [ஒ-9]

### கூட்டு...

யாழ் மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு திருமலை சென்று மா எடுத்து வந்ததற்கான கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தால் ப, நோ. கூ. சங்கங்கள் போக்குவரத்து கூலியைச் சமாளிக்க, ஒரு கிலோ மாவை 25 சதம் கூட்டி விற்பனை செய்து வந்தன:

உணவுத் திணைக்களத்தில் இருந்து கடந்த வெள்ளி கிடைத்த உத்தரவை அடுத்து கொடுப்பனவுகள் வழங்கும் வேலைகள் நேற்று யாழ் செயலக உணவுத் திணைக்களத்தில் ஆரம்பமாயின.

இதைத் தொடர்ந்து ப. நோ. கூ. சங்கங்கள் கட்டுப்பாட்டு விலையான 9 ரூபா 40 சதத்துக்கு மாவை விற்பனை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது; (ஒ-3)

### சுங்க ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டர்கள் ஹெவ (கடற்படை) ஸ்குவாட்ரன்லீடர் சத்தருசிங்க (விமானப்படை) மேஜர் பந்தசார (இராணுவம்)

**மட்டககளப்பு மாவட்டம்**

எம். எஸ். ஸ்டீபன் (பொலீஸ் அதிபர்) ஸ்குவாட்ரன் லீடர் கருணாரத்தின (விமானப்படை)

**வவுனியா மாவட்டம்**

எஸ்: எஸ் நவரட்னராசா (பொலீஸ் அதிபர்) லெப். கேர்னல் பத்மஸ்ரீ (இராணுவம்

**காலி மாவட்டம்**

ஏ: ஜெயவர்த்தன (பொலிஸ் அதிபர்) மேஜர் பெர்னாண்டோ (இராணுவம்)

**மன்னார் மாவட்டம்**

மேஜர் என்; விஜயவிக்ரம (இராணுவம்) கப்டன் எம். ஜெயவர்த்தன (இராணுவம்)

**கொழும்பு மாவட்டம்**

ஆர்; குணசிங்க (பொலீஸ் அதிபர்) எம்; டி. ஜே. டயஸ் (பொலீஸ் அதிபர்) கேர்னல் விஜேந்திரா (இராணுவம்) ஸ்குவாட்ரன் லீடர் மாரம்பே (விமானப்படை) ஸ்குவாட்ரன் லீடர் திஸநாயக்கா (விமானப்படை) (ஒ-எ)

### கொழும்பில் குண்டு வெடிப்புகள்

கொழும்பு, ஆக. 29

கொழும்பில் நேற்று நான்கு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன;

நேற்று நண்பகல் வரையான 24 மணி நேரத்தில் 16 பேர் தென்பகுதியில் கொலையுண்டனர்;

வடமேற்கு மாகாண ஆளுநர் மேஜர் மொன்டேகு ஜெயவிக்ரமவின் வாசஸ்தலத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு பாதுகாவலர் கொல்லப்பட்டார்;

கண்டியில் ஆறு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன (அ-எ)

### காரைநகரில் ஊரடங்கு

யாழ்ப்பாணம், ஆக. 29

காரைநகர் - வலந்தலைச் சந்திக்கு அண்மையில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்றுக் காலை குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது;

காலை 8 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தை அடுத்து காரைப்பகுதியில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

மாலையில் வழமை நிலை திரும்பியது. (இ-9)

### கரவெட்டியில்

கரவெட்டி, ஆக. 29

கரவெட்டியின் சில பகுதிகளில் நேற்று முன் தினம் தேடுதல் இடம்பெற்றது மத்தொனிப் பகுதி,கரவெட்டி கிழக்கு நுணுவில் பகுதிகளில் இடம் பெற்றதேடுதலின்போது சிலர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது.

அதே சமயம் கரணவாய், நவிண்டில் பகுதிகளில் படையினரின் தீவிரரோந்தும் இடம் பெற்றது. (ஒ-70)

### வடமராட்சி குடும்பங்கள் முல்லைத்தீவில்

முல்லைத்தீவு, ஆக 29

பருத்தித்துறை, அல்வாய் வடக்கைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான குடும்பங்கள் முல்லைத்தீவுக்கு வந்து சேர்ந்துள்ளன.

நேற்று முன்தினம் இங்கு வந்து சேர்ந்த இவர்கள். தாம் பீதியின் காரணமாக அங்கிருந்து வெளியேறியதாகக் கூறினர்; (ஒ-92)

### தந்தையும் மகளும் வெட்டப்பட்டு ஆஸ்பத்திரியில்!

தாளையடி, ஆக 29

தந்தையும், மகளும் வெட்டுக் காயங்களுடன் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்;

ஆழியவளையைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை சதிர்காமு, திருமதி மகேந்திரராசா கலாதேவி ஆகிய இருவருமே வெட்டுக்காயங்களுக்கு உள்ளானவர்கள் [ஒ-144]

### மின்சாரம்...

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்பட்டனர் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது.

இன்றுள்ள சூழ்நிலைகளைப் பார்க்குமிடத்து, வடக்குக்கான நீர் மின்சாரம் இப்போதைக்கு கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறு இல்லை'' —என்றார். (ஒ-3)

## ஈரோஸ் உறுப்பினர்கள் மூவரின் சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஆக. 29

கிழக்கில் கடத்திச் செல்லப்பட்டிருந்த ஈரோஸ் அமைப்பு உறுப்பினர்களில் மூவர்கொலை செய்யப்பட்டுவிட்டதாக நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள பிரந்திய அமைப்பு அலுவலகம் அறிவித்தது;

அக்கரைப்பற்றில் கடத்தப்பட்ட ரவீந்திரன், மைக்கல் ராஜி ஆகியோரின் சடலங்கள் ஞாயிறன்று மாலை கண்டெடுக்கப்பட்டதாகவும்—

வீரமுனையைச் சேர்ந்த ரவி என்பவரின் சடலம் நேற்றுக் காலை அமைதிப்படையினரால் மீட்கப்பட்டு சம்மாந்துறை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### வெற்றிலைக்கேணியில் ஒருவர் சுட்டுக்கொலை

தாளையடி, ஆக. 29

வடமராட்சி கிழக்கிலுள்ள வெற்றிலைக்கேணி கடற்கரை வீதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று கடந்த சனிக்கிழமை காணப்பட்டது:

இச்சடலம் வெற்றிலைக் கேணியைச் சேர்ந்த யோசப் ஜோன் (பொஸ்கோ-வயது36) என்பவருடையது என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது.

சம்பவத்தை அடுத்து ஞாயிற்றுக்கிழமை மண்டலாய், வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளில் அமைதிப்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. (ஒ-144)

### நல்லூர்...

கஜுக்குத் தெரிந்ததே;

நல்லூரில் இன்று கூடும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் வசதிக்காக குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன; (அ-3)

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா நடராசா (C, C)

நல்லூரை பிறப்பிடமாகக் கொண்டவரும், சுண்டுக்குளி சோமசுந்தரம் ஒழுங்கையில் வசிப்பவருமாகிய செல்லப்பா நடராசா அவர்கள் 28 - 8 - 89 அன்று காலமாகி விட்டார்; இவர் காலம்சென்ற திரு. சின்னத்தம்பி செல்லப்பாவினதும் மனைவி பாக்கியத்தினதும் மூத்தமகனும், இராசலெட்சுமியின் அன்புக் கணவரும், தவனேஸ்வரி, நகுலேஸ்வரி, சகுந்தலா, (விற்பனைத் திணைக்களக் காரியாலயம் யாழ்ப்பாணம்), சிறிஸ்கந்தராசா (Kent Lanka Paint Co Pvt Ltd) சந்திரவதனி, இந்திராணி (பனை அபிவிருத்தி திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெபானந்தராஜா (சவூதி), முருகதாஸ்( ஜேர்மனி), யோகேஸ்வரி அமரசிங்கம் (Tito Asia LTD) ஆகியோரின் அன்பு மாமனாரும், கனகசுந்தரம் (சிங்கப்பூர்); கனகராசா, கமலாம்பிகை (ஜேர்மனி), பாலசிங்கம் (முன்னாள் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புச்சகோதரரும், திரு. தி. கனகசுந்தரம், கமலாம்பிகை, விவேகானந்தன் (ஜேர்மனி), ஞானலோஜினி ஆகியோரின் மைத்துனரும், லோகேஸ்வரன், துஷியந்தன், ஜெயந்தன், சஜாவல்லி, ஹரிதாஸ்சதீசன் டிலீப்குமார், திரிஷாந்தி, சுதாகரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்; அன்னாரின் பூதவுடல் இல, 33 சோமசுந்தரம் ஒழுங்கை சுண்டுக்குளி இல்லத்திலிருந்து 30- 8- 89 புதன்கிழமை பிற்பகல் 2, 00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
மனைவி. பிள்ளைகள்;

33, சோமசுந்தரம் லேன்,
சுண்டுக்குளி; (1909)

### திரு. பொன்னுத்துரை குலநாதன்

(மகாஜனக் கல்லூரி உப. அதிபர்)

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த பொன்னுத்துரை குலநாதன் அவர்கள் 28 - 8 - 89 அன்று காலமானார்; இவர் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி உப அதிபரும், ராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், குலரஜனி குலராஜன், குலரூபன், குலமோகன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29 - 8 - 89) செவ்வாய்க்கிழமை மாலை 2, 00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
குலராஜன்:

உதயபதி,
அளவெட்டி தெற்கு.
அளவெட்டி; (1848)


### திரு. கந்தையா நாராயணபிள்ளை

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - கதிராசிப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி, இளையதம்பி, சின்னத்தம்பி, இலட்சுமிப்பிள்ளை, இளையபிள்ளை, பொன்னம்மா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், கேசவன், சிவனேஸ்வரி, காலஞ்சென்ற இராமலிங்கம் ஜெகதீஸ்வரி, செல்வி நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாகிய நாராயணபிள்ளை அவர்கள் மலாயா நாட்டில் குவாவலம்பூர் நகரில் 19-08-89 அன்று சிவபதம் அடைந்துவிட்டார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் உற்றார், உறவினர் சகலருக்கும் அறியத் தருகின்றேன்,

நாச்சிமார் கோவில் ஒழுங்கை,
தெல்லிப்பழை;
(1840)

தகவல்:
க. இளையதம்பி
சகோதரன்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி. மாசிலாமணி பாக்கியமலர்

மலர்வு: 26 - 6 - 1936

உதிர்வு: 30 - 7 - 1989

மாதமொன்று ஆனாலும் ஆறுதம்மா உம் பசுமையான நினைவலைகள்! எம் நெஞ்சிலிருந்து கொட்டும் உதிர அலைகள் இறைவனைத் தவிர யாரறிவார்?

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

கணவன், பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
தந்தை, மைத்துனர், மைத்துனிகள்
உற்றார், உறவினர்கள்;

சங்கமான் வீதி,
நல்லூர் வடக்கு.
யாழ்ப்பாணம். (1844)


எமது புதிய வெளியீடு
கார்த்திக் - ராதாரவி S. S. சந்திரன் நடித்த
கர்ணனின்
இரட்டைக் குழல் துப்பாக்கி
(ஒரிஜினல்)
வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி யாழ்ப்பாணம்; (1910)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29-08-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org